60) $10\sqrt{3}$மீ உயரமுள்ள கோபுரத்தின் அடியிலிருந்து 30மீ தொலைவில் தரையில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து கோபுரத்தின் உச்சியின் ஏற்றக்கோணத்தைக் காண்க. **[S-21 , A-22]**

**தீர்வு:-**

$$tan\theta = \frac{\text{எப}}{\text{அப}}$$

$$tan\theta = \frac{BT}{AB}$$

$$tan\theta = \frac{10\sqrt{3}}{30} = \frac{\sqrt{3}}{3}$$

$$\therefore tan\theta = \frac{1}{\sqrt{3}}$$

$$\therefore \theta = 30^0$$




61) ஒரு சாலையில் இருபுறமும் இடைவெளியே இல்லாமல் வரிசையாக வீடுகள் தொடர்ச்சியாக உள்ளன. அவற்றின் உயரம் $4\sqrt{3}$மீ. பாதசாரி ஒருவர் சாலையில் மையப்பகுதியில் நின்றுகொண்டு வரிசையாக உள்ள வீடுகளை நோக்குகிறார். $30^0$ ஏற்றக் கோணத்தில் பாதசாரி வீட்டின் உச்சியை நோக்குகிறார் எனில், சாலையின் அகலத்தைக் காண்க.

**தீர்வு:-**

$$tan\theta = \frac{\text{எப}}{\text{அப}}$$

$$tan30^0 = \frac{BC}{PB}$$

$$\frac{1}{\sqrt{3}} = \frac{4\sqrt{3}}{x}$$

$$\therefore x = 4\sqrt{3} \times \sqrt{3}$$

$$\therefore x = 4 \times 3 = 12\text{மீ}$$




62) 20 மீ உயரமுள்ள ஒரு கட்டடத்தின் உச்சியில் ஒரு விளையாட்டு வீரர் அமர்ந்து கொண்டு தரையிலுள்ள ஒரு பந்தை $60^0$ இறக்கக்கோணத்தில் காண்கிறார் எனில். கட்டட அடிப்பகுதிக்கும் பந்திற்கும் இடையேயுள்ள தொலைவைக் காண்க. ($\sqrt{3} = 1.732$).

**தீர்வு:-**

$$tan\theta = \frac{\text{எப}}{\text{அப}}$$

$$tan60^0 = \frac{BC}{AB}$$

$$\sqrt{3} = \frac{20}{x}$$

$$\therefore x = \frac{20}{\sqrt{3}} = \frac{20 \times \sqrt{3}}{\sqrt{3} \times \sqrt{3}}$$

$$\therefore x = \frac{20 \times 1.732}{3}$$

$$\therefore x = 20 \times 0.5773$$

$$x = 11.55\text{மீ}$$



# MATHS MASTERS

63) இரண்டு கட்டடங்களுக்கு இடையேயுள்ள கிடைமட்டத் தொலைவு 140 மீ இரண்டாவது கட்டிடத்தின், உச்சியிலிருந்து முதல் கட்டடத்தின் உச்சிக்கு உள்ள இறக்கக்கோணம் $30^0$ ஆகும். முதல் கட்டத்தின் உயரம் 60 மீ எனில் இரண்டாவது கட்டத்தின் உயரத்தையும் காண்க.$(\sqrt{3} = 1.732)$.

**தீர்வு:-**




$$tan\theta = \frac{எப}{அப}$$

$$tan30^0 = \frac{CM}{AM}$$

$$\frac{1}{\sqrt{3}} = \frac{CM}{140}$$

$$\therefore CM = \frac{140}{\sqrt{3}} = \frac{140 \times \sqrt{3}}{\sqrt{3} \times \sqrt{3}}$$

$$\therefore CM = \frac{140 \times 1.732}{3}$$

$$\therefore CM = 140 \times 0.5773$$

$$h = CM + MD = 80.83 + 60$$

$$\therefore h = 140.83 \text{ மீ}$$

64) $50\sqrt{3}$மீ உயரமுள்ள ஒரு பாறையின் உச்சியிலிருந்து $30^0$ இறக்கக் கோணத்தில் தரையிலுள்ள மகிழுந்து ஒன்று பார்க்கப்படுகிறது எனில், மகிழுந்திற்கும் பாறைக்கும் இடையேயுள்ள தொலைவைக் காண்க.

**தீர்வு:-**

$$tan\theta = \frac{எப}{அப}$$

$$tan30^0 = \frac{KR}{CK}$$

$$\frac{1}{\sqrt{3}} = \frac{50\sqrt{3}}{x}$$

$$\therefore x = 50\sqrt{3} \times \sqrt{3} = 50 \times 3$$

$$\therefore x = 150\text{மீ}$$




65) இரண்டு கட்டடங்களுக்கு இடைப்பட்ட கிடைமட்டத் தொலைவு 70மீ ஆகும். இரண்டாவது கட்டத்தின் உச்சியிலிருந்து முதல் கட்டடத்தின் உச்சிக்கு உள்ள இறக்கக்கோணம் $45^0$ ஆகும். இரண்டாவது கட்டடத்தின் உயம் 120மீ எனில் முதல் கட்டடத்தின் உயரத்தைக் காண்க.

**தீர்வு:-**

$$tan\theta = \frac{எப}{அப}$$

$$tan45^0 = \frac{AE}{EC}$$

$$1 = \frac{120 - x}{70}$$

$$\therefore 70 = 120 - x$$

$$\therefore x = 120 - 70 = 50\text{மீ}$$




66) ஓர் உருளை வடிவப் பீப்பாயின் உயரம் 20 செ.மீ மற்றும் அடிப்புற ஆரம் 14 செ.மீ எனில், அதன் வளைபரப்பு மறறும் மொத்தப் புறப்பரப்பைக் காண்க. **[A-22]**

**தீர்வு:-**

$r = 14$செமீ, $h = 20$செமீ

உருளையின் வளைபரப்பு$= 2\pi rh$

$$= 2 \times \pi \times 14 \times 20$$

$= 560\pi$ ச. செமீ

உருளையின் மொத்தபரப்பு$= 2\pi r(h + r)$

$$= 2 \times \pi \times 14 \times (20 + 14)$$

$$= 2 \times \pi \times 14 \times 34$$

$= 952\pi$ ச. செமீ

67) 88 ச.செமீ வளைபரப்புடைய ஒரு நேர்வட்ட உருளையின் உயரம் 14 செ.மீ எனில், உருளையின் விட்டம் காண்க.

**தீர்வு:-**

$h = 20$செமீ

உருளையின் வளைபரப்பு= 88 ச செமீ

$$2\pi rh = 88$$

$$2 \times \frac{22}{7} \times r \times 14 = 88$$

$$r = 88 \times \frac{1}{2} \times \frac{7}{22} \times \frac{1}{14}$$

$r = 1$செமீ

விட்டம் $d = 2$செமீ

68) 704 ச.செமீ மொத்தப் புறப்பரப்பு கொண்ட ஒரு கூம்பின் ஆரம் 7செ.மீ எனில், அதன் சாயுயரம் காண்க. **[A-22]**

**தீர்வு:-**

$r = 7$செமீ

கூம்பின் மொத்தப்புறப்பரப்பு= 704 ச செமீ

$$\pi rl(l + r) = 704$$

$$\frac{22}{7} \times 7 \times (l + 7) = 704$$

$$(l + 7) = 704 \times \frac{7}{22} \times \frac{1}{7}$$

$$(l + 7) = 32$$

$$l = 32 - 7$$

$l = 25$ செமீ

69) ஒரு கோளத்தின் புறப்பரப்பு 154 ச.மீ எனில், அதன் விட்டம் காண்க. **[S-20]**

**தீர்வு:-**

கோளத்தின் புறப்பரப்பு= 154 சமீ

$$4\pi r^2 = 154$$

$$4 \times \frac{22}{7} \times r^2 = 154$$

$$r^2 = 154 \times \frac{1}{4} \times \frac{7}{22}$$

$$r^2 = 154 \times \frac{1}{4} \times \frac{7}{22}$$

$$r^2 = \frac{49}{4}$$

$\therefore r = \frac{7}{2}$மீ

∴விட்டம் $d = 7$மீ

70) ஒரு திண்ம அரைக்கோளத்தின் அடிப்பரப்பு 1386 ச.மீ எனில், அதன் மொத்த புறப்பரப்பைக் காண்க. **[S-20]**

**தீர்வு:-**

அரைக்கோளத்தின் அடிப்பரப்பு=வட்டத்தின் பரப்பு

$$\therefore \pi r^2 = 1386$$

அரைக்கோளத்தின் மொத்தப்புறப்பரப்பு= $4\pi r^2$

$$= 3 \times 1386$$

$= 4158$ சமீ

71) உயரம் 2 மீ மற்றும் அடிப்பரப்பு 250 சமீ கொண்ட ஓர் உருளையின் கனஅளவைக் காண்க. **[S-21]**

**தீர்வு:-**

$h = 2$மீ

உருளையின் அடிப்பரப்பு=வட்டத்தின் பரப்பு

$\therefore \pi r^2 = 250$ சமீ

உருளையின் கனஅளவு= $\pi r^2 h$

$= 250 \times 2 = 500$ சமீ

72) ஒரு நேர் வட்டக் கூம்பின் கனஅளவு 11088 க.செமீ ஆகும். கூம்பின் உயரம் 24 செமீ எனில், அதன் ஆரம் காண்க.

**தீர்வு:-**

$h = 24$ செமீ

கூம்பின் கனஅளவு= 11088 கசெமீ

$$\frac{1}{3}\pi r^2 h = 11088$$

$$\frac{1}{3} \times \frac{22}{7} \times r^2 \times 24 = 11088$$

$$\therefore r^2 = 11088 \times 3 \times \frac{7}{22} \times \frac{1}{24}$$

$$r^2 = 63 \times 7 = 3 \times 3 \times 7 \times 7$$

$$\therefore r = 3 \times 7 = 21 \text{ செமீ}$$

73) 16 செமீ ஆரமுள்ள ஓர் உலோகப் பந்து, உருக்கப் பட்டு 2 செமீ ஆரமுள்ள சிறு பந்துகாளக்கப்பட்டால், எத்தனை பந்துகள் கிடைக்கும்?

**தீர்வு:-**

$R = 16$ செமீ, $r = 2$ செமீ

$$\frac{4}{3}\pi R^3 = n \times \frac{4}{3}\pi r^3$$

$$n \times r^3 = R^3$$

$$n \times 2^3 = 16^3$$

$$n = \frac{16 \times 16 \times 16}{2 \times 2 \times 2}$$

$$n = 8 \times 8 \times 8 = 512 \text{பந்துகள்}$$

74) களிமண் கொண்டு செய்யப்பட்ட 24 செமீ உயரமுள்ள ஒரு கூம்பை ஒரு குழந்தை அதே ஆரமுள்ள ஓர் உருளையாக மாற்றுகிறது எனில், உருளையின் உயரம் காண்க.

**தீர்வு:-**

கூம்பின் உயரம் $H = 24$ செமீ

கூம்பின் ஆரம்=உருளையின் ஆரம்= $r$

∴உருளையின் கனஅளவு=கூம்பின் கனஅளவு

$$\pi r^2 h = \frac{1}{3}\pi r^2 H$$

$$h = \frac{1}{3} \times H$$

$$h = \frac{1}{3} \times 24$$

$$h = 8 \text{ செமீ}$$

75) இரு கூம்புகளுடைய கன அளவுகளின் விகிதம் 2:3 ஆகும். இரண்டாம் கூம்பு உயரம் முதல் கூம்பின் உயரத்தைப் போல் இரு மடங்கு எனில், அவற்றின் ஆரங்களின் விகிதம் காண்க.

**தீர்வு:-**

முதல் கூம்பின் கனஅளவு= $\frac{1}{3}\pi {r_1}^2 h_1$

இரண்டாவது கூம்பின் கனஅளவு= $\frac{1}{3}\pi {r_2}^2 h_2$

மேலும் $h_2 = 2h_1$

$$\therefore \frac{\frac{1}{3}\pi {r_1}^2 h_1}{\frac{1}{3}\pi {r_2}^2 h_2} = \frac{2}{3}$$

$$\frac{{r_1}^2 h_1}{{r_2}^2 2h_1} = \frac{2}{3}$$

$$\frac{{r_1}^2}{{r_2}^2 \times 2} = \frac{2}{3}$$

$$\frac{{r_1}^2}{{r_2}^2} = \frac{2 \times 2}{3}$$

$\frac{r_1}{r_2} = \frac{2}{\sqrt{3}}$ -------->$r_1 : r_2 = 2 : \sqrt{3}$

76) சம ஆரங்கள் கொண்ட இரு கூம்புகளின் கனஅளவுகள் 3600 க.செமீ மற்றும் 5040 க.செமீ எனில், உயரங்களின் விகிதம் காண்க.

**தீர்வு:-**

$$r_1 = r_2$$

$$\therefore \frac{V_1}{V_2} = \frac{\frac{1}{3}\pi {r_1}^2 h_1}{\frac{1}{3}\pi {r_2}^2 h_2} = \frac{3600}{5040}$$

அ.சுப்பாராஜ்.,ப.ஆ.,(கணக்கு), அரசுஉயர்நிலைப்பள்ளி, இருஞ்சிறை-626612, விருதுநகர்மாவட்டம்.
ப செந்தில்குமார்.,ப.ஆ(கணக்கு) அரசு மேல்நிலைப்பள்ளி, பனையூர்-626129, விருதுநகர் மாவட்டம்.

$$\therefore \frac{r_1^2 h_1}{r_1^2 h_2} = \frac{360}{504}$$

$$\frac{h_1}{h_2} = \frac{40}{56} \quad - - - - \rightarrow \quad h_1 : h_2 = 5:7$$

77) கொடுக்கப்பட்ட தரவுப் புள்ளிகளுக்கு வீச்சு மற்றும் வீச்சுக்கெழு காண்க: 25, 67, 48, 53, 18, 39, 44.

**தீர்வு:-**

இறங்குவரிசை 67,53,48,44,39,25,18

$$\therefore L = 67, S = 18$$

வீச்சு$= L - S = 67 - 18$

வீச்சு$= 49$

வீச்சுக்கெழு$= \frac{L-S}{L+s}$

$$= \frac{67-18}{67+18}$$

$$= \frac{49}{85} = 0.576$$

78) கொடுக்கப்பட்ட பரவலின் வீச்சு காண்க.

| வயது (வருடங்களில்) | 16-18 | 18-20 | 20-22 | 22-24 | 24-26 | 26-28 |
|---|---|---|---|---|---|---|
| மாணவர்களின் எண்ணிக்கை | 0 | 4 | 6 | 8 | 2 | 2 |

**தீர்வு:-**

$$\therefore L = 28, S = 18$$

வீச்சு$= L - S = 28 - 18$

வீச்சு$= 10$

79) கீழ்க்காணும் தரவுகளுக்கு வீச்சு மற்றும் வீச்சுக் கெழுவை காண்க.

(i) 63, 89, 98, 125, 79, 108, 117, 68. **[S-20]**

(ii) 43.5, 13.6, 18.9, 38.4, 61.4, 29.8.

**தீர்வு:-**

(i) இறங்குவரிசை 125,117,108,98,89,79,68,63

$$\therefore L = 125, S = 63$$

வீச்சு$= L - S = 125 - 63$

வீச்சு$= 62$

வீச்சுக்கெழு$= \frac{L-S}{L+s}$

$$= \frac{125-63}{125+63}$$

$$= \frac{62}{188} = 0.33$$

(ii) இறங்குவரிசை 61.4, 43.5, 38.4, 29.8, 18.9, 13.6

$$\therefore L = 61.4, S = 13.6$$

வீச்சு$= L - S = 61.4 - 13.6$

வீச்சு$= 47.8$

வீச்சுக்கெழு$= \frac{L-S}{L+s}$

$$= \frac{61.4-13.6}{61.4+13.6}$$

$$= \frac{47.8}{75} = 0.64$$

80) ஒரு தரவின் வீச்சு 13.67 மற்றும் மிகப்பெரிய மதிப்பு 70.08 எனில், மிகச் சிறிய மதிப்பைக் காண்க.

**தீர்வு:-**

∴வீச்சு$= 13.67, L = 70.08$

வீச்சு$= L - S$

$$13.67 = 70.08 - S$$

$$S = 70.08 - 13.67$$

$$S = 56.41$$

# MATHS MASTERS

81) ஒரு தரவின் வீச்சு மற்றும் மிகச் சிறிய மதிப்பு ஆகியன முறையே 36.8 மற்றும் 13.4 எனில், மிகப்பெரிய மதிப்பைக் காண்க.

**தீர்வு:-**

∴வீச்சு $= 36.8, S = 13.4$

வீச்சு $= L - S$

$36.8 = L - 13.4$

$$L = 36.8 + 13.4$$

$$S = 50.2$$

82) கொடுக்கப்பட்ட தரவின் வீச்சைக் காண

| வருமானம் | 400-450 | 450-500 | 500-550 | 550-600 | 600-650 |
|---|---|---|---|---|---|
| ஊழியர்களின் எண்ணிக்கை | 8 | 12 | 30 | 21 | 6 |

**தீர்வு:-**

$$\therefore L = 450, S = 650$$

வீச்சு $= L - S = 650 - 450$

வீச்சு $= 200$

83) ஒரு தரவின் திட்ட விலக்கம் மற்றும் சராசரி ஆகியன முறையே 6.5 மற்றும் 12.5 எனில், மாறுபாட்டுக் கெழுவைக் காண்க.

**தீர்வு:-**

$$\therefore \sigma = 6.5, \quad \bar{x} = 12.5$$

மாறுபாட்டுக்கெழு $CV = \frac{\sigma}{\bar{x}} \times 100\%$

$$= \frac{6.5}{12.5} \times 100\%$$

$$= \frac{13/2}{25/2} \times 100\%$$

$$= 13 \times 4$$

மாறுபாட்டுக்கெழு $CV = 52$

84) ஒரு தரவின் திட்ட விலக்கம் மற்றும் மாறுபாட்டுக் கெழு ஆகியன முறையே 1.2 மற்றும் 25.6 எனில், அதன் சராசரியைக் காண்க.

**தீர்வு:-**

$$\therefore \sigma = 1.2, \quad CV = 25.6$$

மாறுபாட்டுக்கெழு $CV = \frac{\sigma}{\bar{x}} \times 100\%$

$$25.6 = \frac{1.2}{\bar{x}} \times 100$$

$$\bar{x} = \frac{1.2}{25.6} \times 100$$

$$= \frac{120}{25.6}$$

சராசரி $\bar{x} = 4.69$

85) ஒரு தரவின் சராசரி மற்றும் மாறுபாட்டுக் கெழு முறையே 15 மற்றும் 48 எனில் அதன் திட்ட விலக்கத்தைக் காண்க.

**தீர்வு:-**

$$\therefore \bar{x} = 15, \quad CV = 48$$

மாறுபாட்டுக்கெழு $CV = \frac{\sigma}{\bar{x}} \times 100\%$

$$48 = \frac{\sigma}{15} \times 100$$

$$\sigma = \frac{48 \times 15}{100}$$

$$= \frac{720}{100}$$

திட்டவிலக்கம் $\sigma = 7.2$

86) மர வரைபடத்தை பயன்படுத்தி இரண்டு பகடைகள் உருட்டப்படும் போது கிடைக்கும் கூறுவெளியை எழுதுக.

**தீர்வு:-**



$$S = \{ (1,1),(1,2),(1,3),(1,4),(1,5),(1,6) \\ (2,1),(2,2),(2,3),(2,4),(2,5),(2,6) \\ (3,1),(3,2),(3,3),(3,4),(3,5),(3,6) \\ (4,1),(4,2),(4,3),(4,4),(4,5),(4,6) \\ (5,1),(5,2),(5,3),(5,4),(5,5),(5,6) \\ (6,1),(6,2),(6,3),(6,4),(6,5),(6,6) \}$$

87) இரண்டு நாணயங்கள் ஒன்றாகச் சுண்டப்படுகின்றன. இரண்டு நாணயங்களிலும் வெவ்வேறு முகங்கள் கிடைப்பதற்கான நிகழ்தகவு என்ன?

**தீர்வு:-**

$S = \{HH, HT, TH, TT\}$

$n(S) = 4$

$A$ = {வெவ்வேறு முகங்கள் கிடைத்தல்}

$= \{HT, TH\}$

$n(A) = 2$

$P(A) = \frac{n(A)}{n(S)}$

$= \frac{2}{4} = \frac{1}{2}$

88) ஒரு பகடை உருட்டப்படும் அதே நேரத்தில் ஒரு நாணயமும் சுண்டப்படுகிறது. பகடையில் ஒற்றைப்படை எண் கிடைப்பதற்கும், நாணயத்தில் தலைக் கிடைப்பதற்குமான நிகழ்தகவினைக் காண்க.

**தீர்வு:-**

$S = \{1H, 1T, 2H, 2T, 3H, 3T, 4H, 4T, 5H, 5T, 6H, 6T\}$

$n(S) = 12$

$A$ = {பகடையில் ஒற்றைஎண் நாணயத்தில் தலை கிடைத்தல்}

$= \{1H, 3H, 5H\}$

$n(A) = 3$

$P(A) = \frac{n(A)}{n(S)}$

$= \frac{3}{12} = \frac{1}{4}$

89) ஒரு நெட்டாண்டில்(leaf year) 53 சனிக்கிழமைகள் கிடைப்பதற்கான நிகழ்தகவு என்ன?

**தீர்வு:-**

நெட்டாண்டில் 366 = 52 வாரங்கள் + 2 நாட்கள்

$S$ = {(ஞா,தி),(தி,செ),(செ,பு),(பு,வி),(வி,வெ),(வெ,ச),(ச,ஞா)}

$n(S) = 7$

$A$ = {நெட்டாண்டில 53 சனிக்கிழமை கிடைத்தல்}

= {(வெ,ச),(ச,ஞா) }

$n(A) = 2$

www.nammakalvi.com



$$P(A) = \frac{n(A)}{n(S)}$$
$$= \frac{2}{7}$$

90) மூன்று நாணயங்கள் சுண்டப்படும்பொழுது கிடைக்கும் கூறுவெளியை மர வரைபடத்தைப் பயன்படுத்தி எழுதுக.

**தீர்வு:-**




$n(S) = \{HHH, HTH, THH, TTH, HHT, HTT, THT, TTT\}$

91) ஒரு பையிலுள்ள 1 முதல் 6 வரை எண்கள் குறிக்கப் பட்ட பந்துகளிலிருந்து, இரண்டு பந்துகள் எடுப்பதற்கான கூறுவெளியை மர வரைபடம் மூலமாகக் குறிப்பிடுக.

**தீர்வு:-**



$$S = \{ (1,1),(1,2),(1,3),(1,4),(1,5),(1,6)$$
$$(2,1),(2,2),(2,3),(2,4),(2,5),(2,6)$$
$$(3,1),(3,2),(3,3),(3,4),(3,5),(3,6)$$
$$(4,1),(4,2),(4,3),(4,4),(4,5),(4,6)$$
$$(5,1),(5,2),(5,3),(5,4),(5,5),(5,6)$$
$$(6,1),(6,2),(6,3),(6,4),(6,5),(6,6) \}$$

92) ஒரு சமவாய்ப்புச் சோதனையில் ஒரு நிகழ்ச்சி $A$ என்க. இங்கு $P(A):P(\bar{A}) = 17:15$ மற்றும் $n(S) = 640$ எனில்,$(i)$ $P(\bar{A})$ $(ii)$ $n(A)$-ஐக் காண்க.

**தீர்வு:-**

$$P(\bar{A}) = 1 - P(A)$$

$P(A):P(\bar{A}) = 17:15$

i) $\frac{P(A)}{P(\bar{A})} = \frac{17}{15}$ -----------> $\frac{P(A)}{1-P(A)} = \frac{17}{15}$

அ.சுப்பாராஜ்.,ப.ஆ.,(கணக்கு), அரசுஉயர்நிலைப்பள்ளி, இருஞ்சிறை-626612, விருதுநகர்மாவட்டம்.
ப செந்தில்குமார்.,ப.ஆ(கணக்கு) அரசு மேல்நிலைப்பள்ளி, பனையூர்-626129, விருதுநகர் மாவட்டம்.

$$15P(A) = 17[1 - P(A)]$$
$$15P(A) = 17 - 17P(A)$$
$$15P(A) + 17P(A) = 17$$
$$32P(A) = 17$$
$$P(A) = \frac{17}{32}$$

ii) $P(A) = \frac{n(A)}{n(S)}$

$$\frac{17}{32} = \frac{n(A)}{640}$$
$$n(A) = \frac{17 \times 640}{32} = 17 \times 20$$
$$n(A) = 340$$

93) ஒரு நாணயம் மூன்று முறை சுண்டப்படுகிறது. இரண்டு அடுத்தடுத்த பூக்கள் கிடைப்பதற்கான நிகழ்தகவு என்ன?

**தீர்வு:-**

$n(S) = \{HHH, HTH, THH, TTH, HHT, HTT, THT, TTT\}$

$n(S) = 8$

$A =$ {இரண்டு அடுத்தடுத்த பூக்கள் கிடைத்தல்}

$= \{\text{TTH}, \text{HTT}, \text{TTT}\}$

$n(A) = 3$

$$P(A) = \frac{n(A)}{n(S)}$$
$$= \frac{3}{8}$$

94) மாணவர்கள் விளையாடும் விளையாட்டில் அவர்களால் எறியப்படும் கல்லானது வட்டப்பரிதிக்குள் விழுந்தால் அதை வெற்றியாகவும், வட்டப்பரிதிக்கு வெளியே விழுந்தால் அதை தோல்வியாகவும் கருதப்படுகிறது. விளையாட்டில் வெற்றி கொள்வதற்கான நிகழ்தகவு என்ன?




**தீர்வு:-**

செவ்வகப்பகுதியின் பரப்பு$= l \times b = 4 \times 3 = 12$ ச.அடி

வட்டப்பகுதியின் பரப்பு $= \pi r^2 = \pi \times 1^2 = \pi$

வெற்றிகொள்வதற்கான நிகழ்தகவு$= \frac{\pi}{12} = \frac{3.14}{12}$

$$= \frac{314}{1200} = \frac{157}{600}$$

95) $P(A) = 0.37, P(B) = 0.42, P(A \cap B) = 0.09$எனில்,$P(A \cup B)$-ஐக் காண்க.

**தீர்வு:-**

$$P(A \cup B) = P(A) + P(B) - P(A \cap B)$$
$$= 0.37 + 0.42 - 0.09$$
$$= 0.79 - 0.09$$
$$= 0.70$$

96) நன்கு கலைத்து அடுக்கப்பட்ட 52 சீட்டுக்கள் கொண்ட சீட்டுக் கட்டிலிருந்து ஒரு சீட்டு எடுக்கும்போது ஓர் இராசா அல்லது இராணி கிடைப்பதற்கான நிகழ்தகவு என்ன?

**தீர்வு:-**

$n(S) = 52$

$A =$ {ராஜா சீட்டு கிடைத்தல்}

$n(A) = 4$

$$P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{4}{52}$$

$B =$ {ராணி சீட்டு கிடைத்தல்}

$n(B) = 4$

$$P(B) = \frac{n(B)}{n(S)} = \frac{4}{52}$$

அ.சுப்பாராஜ்.,ப.ஆ.,(கணக்கு), அரசுஉயர்நிலைப்பள்ளி, இருஞ்சிறை-626612, விருதுநகர்மாவட்டம்.
ப செந்தில்குமார்.,ப.ஆ(கணக்கு) அரசு மேல்நிலைப்பள்ளி, பனையூர்-626129, விருதுநகர் மாவட்டம்.

$$P(A \cup B) = P(A) + P(B)$$
$$= \frac{4}{52} + \frac{4}{52}$$
$$= \frac{8}{52} = \frac{2}{13}$$

97) $P(A) = \frac{2}{3}, P(B) = \frac{2}{5}, P(A \cup B) = \frac{1}{3}$ எனில், $P(A \cap B)$-ஐக் காண்க.

**தீர்வு:-**

$$P(A \cup B) = P(A) + P(B) - P(A \cap B)$$
$$\frac{1}{3} = \frac{2}{3} + \frac{2}{5} - P(A \cap B)$$
$$P(A \cap B) = \frac{2}{3} + \frac{2}{5} - \frac{1}{3}$$
$$= \frac{1}{3} + \frac{2}{5}$$
$$= \frac{5+6}{15} = \frac{11}{15}$$

98) ஒரு சமவாய்ப்புச் சோதனையில் $A, B$ ஆகியவை ஒன்றையொன்று விலக்கும் நிகழ்ச்சிகள். மேலும் $P(A$ இல்லை$) = 0.45, P(A \cup B) = 0.65$ எனில், $P(B)$-ஐக் காண்க.

**தீர்வு:-**

$$P(A \text{ இல்லை}) = P(\bar{A}) = 1 - P(A)$$
$$= 1 - 0.45$$
$$= 0.55$$
$$P(A \cup B) = P(A) + P(B)$$
$$0.65 = 0.55 + P(B)$$
$$\therefore P(B) = 0.65 - 0.55$$
$$= 0.1$$

99) $A$ மற்றும் $B$-யில், குறைந்தது ஏதாவது ஒன்று நிகழ்வதற்கான நிகழ்தகவு 0.6. $A$ மற்றும் $B$ ஒரே நேரத்தில் நடைபெறுவதற்கான நிகழ்தகவு 0.2 எனில், $P(\bar{A}) + P(\bar{B})$-ஐக் காண்க.

**தீர்வு:-**

$$P(A \cup B) = 0.6 \qquad P(A \cap B) = 0.2$$
$$P(A \cup B) = P(A) + P(B) - P(A \cap B)$$
$$0.6 = P(A) + P(B) - 0.2$$
$$P(A) + P(B) = 0.6 - 0.2$$
$$= 0.4$$
$$P(\bar{A}) + P(\bar{B}) = 1 - P(A) + 1 - P(B)$$
$$= 2 - [P(A) + P(B)]$$
$$= 2 - 0.4$$
$$= 1.6$$

100) நிகழ்ச்சி $A$-க்கான நிகழ்தகவு 0.5 மற்றும் $B$-க்கான நிகழ்தகவு 0.3. $A$ மற்றும் $B$ ஆகியவை ஒன்றையொன்று விலக்கும் நிகழ்ச்சிகள் எனில், $A$-ம், $B$-ம் நிகழாமல் இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

**தீர்வு:-**

$$P(A) = 0.5 \qquad P(B) = 0.3 \qquad P(A \cap B) = 0$$
$$\therefore P(A \cup B) = P(A) + P(B)$$
$$= 0.5 + 0.3 = 0.8$$
$$P(\bar{A} \cap \bar{B}) = P(\overline{A \cup B}) = 1 - P(A \cup B)$$
$$= 1 - 0.8 = 0.2$$

Mail id: mathsmasters.vnr@gmail.com

Website: mathsmasters-vnr.blogspot.com

அ.சுப்பாராஜ்.,ப.ஆ.,(கணக்கு), அரசுஉயர்நிலைப்பள்ளி, இருஞ்சிறை-626612, விருதுநகர்மாவட்டம்.
ப செந்தில்குமார்.,ப.ஆ(கணக்கு) அரசு மேல்நிலைப்பள்ளி, பனையூர்-626129, விருதுநகர் மாவட்டம்.

## ஒரு மதிப்பெண் வினாக்கள்

### அலகு – 1 : உறவுகளும் சார்புகளும்

1) $n(A\ X\ B) = 6$ மற்றும் $A = \{1, 3\}$ எனில், $n(B)$ ஆனது
(1) 1 (2) 2 (3) 3 (4) 6

2) $A = \{a, b, p\}, B = \{2, 3\}, C = \{p, q, r, s\}$ எனில், $n[(A \cup C) X\ B]$ ஆனது
(1) 8 (2) 20 (3) 12 (4) 16

3) $A = \{1, 2\}, 99B = \{1, 2, 3, 4\}, C = \{5, 6\}$ மற்றும் $D = \{5, 6, 7, 8\}$ எனில் கீழே கொடுக்கப்பட்டவைகளில் எது சரியான கூற்று?
(1) $(A\ X\ C) \subset (B\ X\ D)$ (2) $(B\ X\ D) \subset (A\ X\ C)$ (3) $(A\ X\ B) \subset (A\ X\ D)$ (4) $(D\ X\ A) \subset (B\ X\ A)$

4) $A = \{1, 2, 3, 4, 5\}$–லிருந்து, $B$ என்ற கணத்திற்கு 1024 உறவுகள் உள்ளது எனில் $B$-ல் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கை
(1) 3 (2) 2 (3) 4 (4) 8

5) $R = \{(x, x^2) /\ x$ ஆனது $13 -$ ஐவிடக்குறைவானபகாஎண்கள்$\}$ என்ற உறவின் வீச்சகமானது
(1) $\{2, 3, 5, 7\}$ (2) $\{2, 3, 5, 7, 11\}$ (3) $\{4, 9, 25, 49, 121\}$ (4) $\{1, 4, 9, 25, 49, 121\}$

6) $(a + 2, 4)$ மற்றும் $(5, 2a + b)$ ஆகிய வரிசைச் சோடிகள் சமம் எனில், $(a, b)$ என்பது (1) $(2, -2)$ (2) $(5, 1)$ (3) $(2, 3)$ (4) $(3, -2)$

7) $n(A) = m$ மற்றும் $n(B) = n$ என்க. A – லிருந்து B-க்கு வரையறுக்கபட்ட வெற்று கணமில்லாத உறவுகளின் மொத்த எண்ணிக்கை (1) $m^n$ (2) $n^m$ (3) $2^{mn} - 1$ (4) $2^{mn}$

8) $\{(a, 8), (6, b)\}$ ஆனது ஒரு சமனிச்சார்பு எனில், $a$ மற்றும் $b$ மதிப்புகளாவன முறையே
(1) (8, 6) (2) (8, 8) (3) 96, 8) (4) (6, 6)

9) $A = \{1, 2, 3, 4\}, B = \{4, 8, 9, 10\}$ என்க. சார்பு $f: A \longrightarrow B$ ஆனது $f = \{(1, 4), (2, 8), (3, 9), (4, 10)\}$ எனக் கொடுக்கப்பட்டால் $f$ - என்பது
(1) பலவற்றிலிருந்து ஒன்றுக்கான சார்பு (2) சமனிச்சார்பு
(3) ஒன்றுக்கொன்றான சார்பு (4) உட்சார்பு

10) $f(x) = 2x^2$ மற்றும் $g(x) = \frac{1}{3x}$ எனில் $fog$ ஆனது
(1) $\frac{3}{2x^2}$ (2) $\frac{2}{3x^2}$ (3) $\frac{2}{9x^2}$ (4) $\frac{1}{6x^2}$

11) $f: A \longrightarrow B$ ஆனது இருபுறச்சார்பு மற்றும் $n(B) = 7$ ஆனது எனில் $n(A)$ ஆனது
(1) 7 (2) 49 (3) 1 (4) 14

12) $f$ மற்றும் $g$ என்ற இரண்டு சார்புகளும் $f = \{(0, 1), (2, 0), (3, -4), (4, 2), (5, 7)\}$, $g = \{(0, 2), (1, 0), (2, 4), (-4, 2), (7, 0)\}$ எனக் கொடுக்கப்பட்டால் $fog-$ ன் வீச்சகமானது
(1) $\{0, 2, 3, 4, 5\}$ (2) $\{-4, 1, 0, 2, 7\}$ (3) $\{1, 2, 3, 4, 5\}$ (4) $\{0, 1, 2\}$

13) $f(x) = \sqrt{1 + x^2}$ எனில்
(1) $f(xy) = f(x).f(y)$ (2) $f(xy) \geq f(x).f(y)$
(3) $f(xy) \leq f(x).f(y)$ (4) இவற்றில் ஒன்றுமில்லை

14) $g = \{(1, 1), (2, 3), (3, 5), (4, 7)\}$ என்ற சார்பானது $g = (x) = \alpha x + \beta$ எனக்கொடுக்கப்பட்டால் $\alpha$ மற்றும் $\beta-$ வின் மதிப்பானது
(1) $(-1, 2)$ (2) $(2, -1)$ (3) $(-1, -2)$ (4) $(1, 2)$

அ.சுப்பாராஜ்.,ப.ஆ.,(கணக்கு), அரசுஉயர்நிலைப்பள்ளி, இருஞ்சிறை-626612, விருதுநகர்மாவட்டம்.
ப செந்தில்குமார்.,ப.ஆ(கணக்கு) அரசு மேல்நிலைப்பள்ளி, பனையூர்-626129, விருதுநகர் மாவட்டம்.

15) $f(x) = (x+1)^3 - (x-1)^3$ குறிப்பிடும் சார்பானது

(1) நேரிய சார்பு (2) ஒரு கனசார்பு (3) தலைகீழ்ச்சார்பு (4) இருபடிச்சார்பு

## எண்களும் தொடர்வரிசைகளும்

1) யூக்ளிடின் வகுத்தல் துணைத் தேற்றத்தின் படி, $a$ மற்றும் $b$ என்ற மிகை முழுக்களுக்கு, தனித்த மிகை முழுக்கள் $q$ மற்றும் $r$, $a = bq + r$ என்றவாறு அமையுமானால், இங்கு $r$ ஆனது,

(1) $1 < r < b$ (2) $0 < r < b$ (3) $0 \le r < b$ (4) $0 < r \le b$

2) யூக்ளிடின் வகுத்தல் துணைத் தேற்றத்தைப் பயன்படுத்தி, எந்த மிகை முழுவின் கனத்தையும் 9 ஆல் வகுக்கும் போது கிடைக்கும் மீதிகள்

(1) 0, 1, 8 (2) 1, 4, 8 (3) 0, 1, 3 (4) 1, 3, 5

3) 65 மற்றும் 117 – யின் மீ.பொ.வ-வை $65m - 117$ என்ற வடிவில் எழுதும் போது, $m$ -யின் மதிப்பு

(1) 4 (2) 2 (3) 1 (4) 3

4) 1729 - ஐ பகாக் காரணிப்படுத்தும் போது, அந்தப் பகா எண்களின் அடுக்குகளின் கூடுதல்

(1) 1 (2) 2 (3) 3 (4) 4

5) 1 முதல் 10 வரையுள்ள (இரண்டு எண்களும் உட்பட) அனைத்து எண்களாலும் வகுபடும் மிகச்சிறிய எண்

(1)2025 (2) 5220 (3) 5025 (4) 2520

6) $7^{4k} \equiv$ _____ (மட்டு100)

(1) 1 (2) 2 (3) 3 (4) 4

7) $F_1 = 1, F_2 = 3$ மற்றும் $F_n = F_{n-1} + F_{n-2}$ எனக் கொடுக்கப்படின் $F_5$ ஆனது

(1) 3 (2) 5 (3) 8 (4) 11

8) ஒரு கூட்டுத்தொடர்வரிசையின் முதல் உறுப்பு 1 மற்றும் பொது வித்தியாசம் 4 எனில், பின்வரும் எண்களில் எது இந்தக் கூட்டுத்தொடர்வரிசையில் அமையும்?

(1) 4551 (2) 10091 (3) 7881 (4) 13531

9) ஒரு கூட்டுத் தொடர்வரிசையின் 6-வது உறுப்பின் 6 மடங்கும் 7-வது உறுப்பின் 7 மடங்கும் சமம் எனில், அக்கூட்டுத் தொடர்வரிசையின் 13-வது உறுப்பு(1)0

(2) 6 (3) 7 (4) 13

10) ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் 31 உறுப்புகள் உள்ளன. அதன் 16-வது உறுப்பு m எனில், அந்தக் கூட்டுத் தொடர்வரிசையில் உள்ள எல்லா உறுப்புகளின் கூடுதல்

(1)16m (2) 62m (3) 31m (4) $\frac{31}{2}m$

11) ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் முதல் உறுப்பு 1 மற்றும் பொது வித்தியாசம் 4. இந்தக் கூட்டுத் தொடர்வரிசையின் எத்தனை உறுப்புகளைக் கூட்டினால் அதன் கூடுதல் 120 கிடைக்கும்? (1) 6

(2) 7 (3) 8 (4) 9

12) $A = 2^{65}$ மற்றும் $B = 2^{64} + 2^{63} + 2^{62} + \dots + 2^0$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. பின்வருவனவற்றில் எது உண்மை?(1) B ஆனது A ஐ விட $2^{64}$ அதிகம் (2) A மற்றும் B சமம்(3) B ஆனது A -ஐ விட 1 அதிகம்(4) A ஆனது B -ஐ விட 1 அதிகம்

13) $\frac{3}{16}, \frac{1}{8}, \frac{1}{12}, \frac{1}{18}, \dots$ என்ற தொடர்வரிசையின் அடுத்த உறுப்பு

(1) $\frac{1}{24}$ (2) $\frac{1}{27}$ (3) $\frac{2}{3}$ (4) $\frac{1}{81}$

14) $t_1, t_2, t_3, \dots$ என்பது ஒரு கூட்டுத் தொடர்வரிசை எனில், $t_6, t_{12}, t_{18}, \dots$ என்பது

(1) ஒரு பெருக்குத் தொடர்வரிசை
(2) ஒரு கூட்டுத் தொடர்வரிசை
(3) ஒரு கூட்டுத் தொடர்வரிசையுமல்ல, பெருக்குத் தொடர்வரிசையுமல்ல
(4) ஒரு மாறிலித் தொடர்வரிசை

15) $(1^3+2^3+3^3+\ ...+15^3)-(1+2+3+\cdots+15)$– யின் மதிப்பு (1) 14400 (2) 14200 (3) 14280 (4) 14520

## இயற்கணிதம்

1) மூன்று மாறிகளில் அமைந்த மூன்று நேரியல் சமன்பாடுகளின் தொகுப்பிற்கு தீர்வுகள் இல்லையெனில், அத்தொகுப்பில் உள்ள தளங்கள் (1) ஒரே ஒரு புள்ளியில் வெட்டுகின்றன (2) ஒரே ஒரு கோட்டில் வெட்டுகின்றன (3) ஒன்றின் மீது ஒன்று பொருந்தும் (4) ஒன்றையொன்று வெட்டாது

2) $x+y-3x=-6, -7y+7z=7, 3z=9$ என்ற தொகுப்பின் தீர்வு (1) $x=1, y=2, z=3$ (2) $x=-1, y=2, z=3$
(3) $x=-1, y=-2, z=3$ (4) $x=1, y=2, z=-3$

3) $x^2-2x-24$ மற்றும் $x^2-kx-6$–யின் மீ.பொ.வ. $(x-6)$ எனில், $k$ - யின் மதிப்பு
(1) 3 (2) 5 (3) 6 (4) 8

4) $\frac{3y-3}{y}\div\frac{7y-7}{3y^2}$ என்பது
(1) $\frac{9y}{7}$ (2) $\frac{9y^3}{(21y-21)}$ (3) $\frac{21y^2-42y+21}{3y^3}$ (4) $\frac{7(y^2-2y+1)}{y^2}$

5) கீழ்க்கண்டவற்றுள் எது $y^2+\frac{1}{y^2}$ -க்குச் சமம் இல்லை.
(1) $\frac{y^4+1}{y^2}$ (2) $\left(y+\frac{1}{y}\right)^2$ (3) $\left(y-\frac{1}{y}\right)^2+2$ (4) $\left(y+\frac{1}{y}\right)^2-2$

6) $\frac{x}{x^2-25}-\frac{8}{x^2+6x+5}$ - யின் சுருங்கிய வடிவம்
(1) $\frac{x^2-7x+40}{(x-5)(x+5)}$ (2) $\frac{x^2+7x+40}{(x-5)(x+5)(x+1)}$ (3) $\frac{x^2-7x+40}{(x^2-25)(x+1)}$
(4) $\frac{x^2+10}{(x^2-25)(x+1)}$

7) $\frac{256\,x^8y^4z^{10}}{25\,x^6y^6z^6}$ - யின் வர்க்கமூலம் (1) $\frac{16}{5}\left|\frac{x^2z^4}{y^2}\right|$ (2) $16\left|\frac{y^2}{x^2z^4}\right|$ (3) $\frac{16}{5}\left|\frac{y}{xz^2}\right|$ (4) $\frac{16}{5}\left|\frac{xz^2}{y}\right|$

8) $x^4+64$ முழு வர்க்கமாக மாற்ற அதனுடன் பின்வருவனவற்றுள் எதைக் கூட்ட வேண்டும்? (1) $4x^2$
(2) $16x^2$ (3) $8x^2$ (4) $-8x^2$

9) $(2x-1)^2=9$– யின் தீர்வு
(1) $-1$ (2) 2 (3) $-1, 2$ (4) இதில் எதுவும் இல்லை

10) $4x^4-24x^3+76x^2+ax+b$ ஒரு முழு வர்க்கம் எனில், $a$ மற்றும் $b$ - யின் மதிப்பு
(1) 100, 120 (2) 10, 12 (3) $-120, 100$ (4) 12, 10

11) $q^2x^2+p^2x+r^2=0$ என்ற சமன்பாட்டின் மூலங்களின் வர்க்கங்கள், என்ற சமன்பாட்டின் மூலங்கள் எனில், $q, p, r$ என்பன (1) ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் உள்ளன
(2) ஒரு பெருக்குத் தொடர்வரிசையில் உள்ளன
(3) கூட்டுத் தொடர்வரிசை மற்றும் பெருக்குத் தொடர்வரிசை இரண்டிலும் உள்ளன. (4) இதில் எதுவும் இல்லை.

12) ஒரு நேரிய பல்லுறுப்புக் கோவையின் வரைபடம் ஒரு (1) நேர்க்கோடு (2) வட்டம் (3) பரவளையம் (4) அதிபரவளையம்

13) $x^2+4x+4$ என்ற இருபடி பல்லுறுப்புக் கோவை $x$ அச்சோடு வெட்டும் புள்ளிகளின் எண்ணிக்கை

www.nammakalvi.com



(1) 0 (2) 1 (3) 0 அல்லது 1 (4) 2

14) கொடுக்கப்பட்ட அணி $A = \begin{pmatrix} 1 & 3 & 5 & 7 \\ 2 & 4 & 6 & 8 \\ 9 & 11 & 13 & 15 \end{pmatrix}$ - க்கான நிரை நிரல் மாற்று அணியின் வரிசை (1) 2 x 3 (2) 3 x 2 (3) 3 x 4 (4) 4 x 3

15) A என்ற அணியின் வரிசை 2 x 3, B என்ற அணியின் வரிசை 3 x 4 எனில், AB என்ற அணியின் நிரல்களின் எண்ணிக்கை (1) 3 (2) 4 (3) 2 (4) 5

16) நிரல்கள் மற்றும் நிரைகள் சம எண்ணிக்கையில்லாத அணி (1) மூலைவிட்ட அணி (2) செவ்வக அணி (3) சதுர அணி (4) அலகு அணி

17) ஒரு நிரல் அணியின், நிரை நிரல் மாற்று அணி (1) அலகு அணி (2) மூலைவிட்ட அணி (3) நிரல் அணி (4) நிரை அணி

18) $2X + \begin{pmatrix} 1 & 3 \\ 5 & 7 \end{pmatrix} = \begin{pmatrix} 5 & 7 \\ 9 & 5 \end{pmatrix}$ எனில், $X$ என்ற அணியைக் காண்க. (1) $\begin{pmatrix} -2 & -2 \\ 2 & -1 \end{pmatrix}$ (2) $\begin{pmatrix} 2 & 2 \\ 2 & -1 \end{pmatrix}$ (3) $\begin{pmatrix} 1 & 2 \\ 2 & 2 \end{pmatrix}$ (4) $\begin{pmatrix} 2 & 1 \\ 2 & 2 \end{pmatrix}$

19) $A = \begin{pmatrix} 1 & 2 \\ 3 & 4 \\ 5 & 6 \end{pmatrix}$, $B = \begin{pmatrix} 1 & 2 & 3 \\ 4 & 5 & 6 \\ 7 & 8 & 9 \end{pmatrix}$ ஆகிய அணிகளைக் கொண்டு எவ்வகை அணிகளைக் கணக்கிட முடியும்?
(i) $A^2$ (ii) $B^2$ (iii) $AB$ (iv) $BA$ (1) (i), (ii) மட்டும் (2) (ii), (iii) மட்டும் (3) (ii), (iv) மட்டும் (4) அனைத்தும்

20) $A = \begin{pmatrix} 1 & 2 & 3 \\ 3 & 2 & 1 \end{pmatrix}$, $B = \begin{pmatrix} 1 & 0 \\ 2 & -1 \\ 0 & 2 \end{pmatrix}$ மற்றும் $C = \begin{pmatrix} 0 & 1 \\ -2 & 5 \end{pmatrix}$ எனில், பின்வருவனவற்றுள் எவை சரி ? (i) $AB + C = \begin{pmatrix} 5 & 5 \\ 5 & 5 \end{pmatrix}$ (ii) $BC = \begin{pmatrix} 0 & 1 \\ 2 & -3 \\ -4 & 10 \end{pmatrix}$ (iii) $BA + C = \begin{pmatrix} 2 & 5 \\ 3 & 0 \end{pmatrix}$ (iv) $(AB)C = \begin{pmatrix} -8 & 20 \\ -8 & 13 \end{pmatrix}$
(1) (i) மற்றும் (ii) மட்டும் (2) (ii) மற்றும் (iii) மட்டும் (3) (iii) மற்றும் (iv) மட்டும் (4) அனைத்தும்

## வடிவியல்

1) $\frac{AB}{DB} = \frac{BC}{FD}$ எனில், ABC மற்றும் EDF எப்பொழுது வடிவொத்தவையாக அமையும்.
(1) $\angle B = \angle E$ (2) $\angle A = \angle D$ (3) $\angle B = \angle D$ (4) $\angle A = \angle F$

2) $\Delta LMN$–யில் $\angle L = 60^o, \angle M = 50^o$ மேலும், $\Delta LMN \sim \Delta PQR$ எனில், $\angle R$–யின் மதிப்பு (1) $40^o$ (2) $70^o$ (3) $30^o$ (4) $110^o$

3) இருசமபக்க முக்கோணம் $\Delta ABC$– யில் $\angle C = 90^o$ மற்றும் AC = 5 செ.மீ, எனில் AB ஆனது
(1) 2.5 செ.மீ (2) 5 செ.மீ (3) 10 செ.மீ (4) $5\sqrt{2}$ செ.மீ

4) கொடுக்கப்பட்ட படத்தில் ST || QR, PS = 2 செ.மீ மற்றும் SQ = 3 செ.மீ. எனில், $\Delta PQR$ -யின் பரப்பளவுக்கும் $\Delta PST$-யின் பரப்பளவுக்கும் உள்ள விகிதம்




(1) 25 : 4 (2) 25 : 7 (3) 25 : 11 (4) 25 : 13

5) இரு வடிவொத்த முக்கோணங்கள் $\Delta ABC$ மற்றும் , $\Delta PQR$ -யின் சுற்றளவுகள் முறையே 36 செ.மீ மற்றும் 24 செ.மீ ஆகும். PQ=10 செ.மீ எனில், AB – யின் நீளம் (1) $6\frac{2}{3}$ செ.மீ (2) $\frac{10\sqrt{6}}{3}$ செ.மீ (3) $66\frac{2}{3}$ செ.மீ (4) 15 செ.மீ

அ.சுப்பாராஜ்.,ப.ஆ.,(கணக்கு), அரசுஉயர்நிலைப்பள்ளி, இருஞ்சிறை-626612, விருதுநகர்மாவட்டம்.
ப செந்தில்குமார்.,ப.ஆ(கணக்கு) அரசு மேல்நிலைப்பள்ளி, பனையூர்-626129, விருதுநகர் மாவட்டம்.

6) $\Delta ABC$–யில் DE || BC. AB = 3.6 செ.மீ, AC = 2.4 செ.மீ மற்றும் AD = 2.1 செ.மீ எனில், AE -யின் நீளம் (1) 1.4 செ.மீ (2) 1.8 செ.மீ (3) 1.2 செ.மீ (4) 1.05 செ.மீ

7) $\Delta ABC$–யில் AD ஆனது, $\angle BAC$ -யின் இருசமவெட்டி. AB = 8 செ.மீ, BD = 6 செ.மீ மற்றும் DC = 3 செ.மீ எனில், பக்கம் AC -யின் நீளம்
(1) 6 செ.மீ (2) 4 செ.மீ (3) 3 செ.மீ (4) 8 செ.மீ

8) கொடுக்கப்பட்ட படத்தில் $\angle BAC = 90^o$ மற்றும் $AD \perp BC$ எனில்,




(1) $BD\,.\,CD = BC^2$ (2) $AB\,.\,AC = BC^2$ (3) $BD\,.\,CD = AD^2$
(4) $AB\,.\,AC = AC^2$

9) 6 மீ மற்றும் 11 மீ உயரமுள்ள இரு கம்பங்கள் சமதளத் தரையில் செங்குத்தாக உள்ளன. அவற்றின் அடிகளுக்கு இடையேயுள்ள தொலைவு 12 மீ எனில் அவற்றின் உச்சிகளுக்கு இடையே உள்ள தொலைவு என்ன? (1) 13 மீ (2) 14 மீ (3) 15 மீ (4) 12.8 மீ

10) கொடுக்கப்பட்ட படத்தில், PR = 26 செ.மீ, QR = 24 செ.மீ, $\angle PAQ = 90^o$, PA = 6 செ.மீ மற்றும் QA = 8 செ.மீ எனில் $\angle PQR$- ஐக் காண்க.




(1) $80^o$ (2) $85^o$ (3) $75^o$ (4) $90^o$

11) வட்டத்தின் தொடுகோடும் அதன் ஆரமும் செங்குத்தாக அமையும் இடம்
(1) மையம் (2) தொடுபுள்ளி (3) முடிவிலி (4) நாண்

12) வட்டத்தின் வெளிப்புறப் புள்ளியிலிருந்து வட்டத்திற்கு எத்தனை தொடுகோடுகள் வரையலாம்?
(1) ஒன்று (2) இரண்டு (3) முடிவற்ற எண்ணிக்கை (4) பூஜ்ஜியம்

13) O –வை மையமாக உடைய வட்டத்திற்கு, வெளியேயுள்ள புள்ளி P – யிலிருந்து வரையப்பட்ட தொடுகோடுகள் PA மற்றும் PB ஆகும். $\angle APB = 70^o$ எனில் $\angle AOB$–யின் மதிப்பு
(1) $100^o$ (2) $110^o$ (3) $120^o$ (4) $130^o$

14) படத்தில் O -வை மையமாக உடைய வட்டத்தின் தொடுகோடுகள் CP மற்றும் CQ ஆகும். ARB ஆனது வட்டத்தின் மீதுள்ள புள்ளி R வழியாகச் செல்லும் மற்றொரு தொடுகோடு ஆகும். CP = 11 செ.மீ மற்றும் BC = 7 செ.மீ எனில் BR – ன் நீளம்




(1) 6 செ.மீ (2) 5 செ.மீ (3) 8 செ.மீ (4) 4 செ.மீ

15) படத்தில் உள்ளவாறு O –வை மையமாகக் கொண்ட வட்டத்தின் தொடுகோடு PR எனில், $\angle POQ$ ஆனது




அ.சுப்பாராஜ்.,ப.ஆ.,(கணக்கு), அரசுஉயர்நிலைப்பள்ளி, இருஞ்சிறை-626612, விருதுநகர்மாவட்டம்.
ப செந்தில்குமார்.,ப.ஆ(கணக்கு) அரசு மேல்நிலைப்பள்ளி, பனையூர்-626129, விருதுநகர் மாவட்டம்.

(1) $120^o$ (2) $100^o$ (3) $110^o$ (4) $90^o$

## ஆயத்தொலை வடிவியல்

1) $(-5,0),(0,-5)$மற்றும் $(5,0)$ ஆகிய புள்ளிகளால் அமைக்கப்படும் முக்கோணத்தின் பரப்பு
(1) $0$ ச.அலகுகள் (2)25 ச.அலகுகள் (3)5 ச.அலகுகள் (4) எதுவுமில்லை

2) ஒரு சுவரின் அருகே நடந்து சென்று கொண்டிருக்கும் ஒரு நபருக்கும் சுவருக்கும் இடையே உள்ள தூரம் 10 அலகுகள். சுவரை Y - அச்சாகக் கருதினால், அந்த நபர் செல்லும் பாதை என்பது
(1) $x = 10$ (2) $y = 10$ (3) $x = 0$ (4) $y = 0$

3) $x = 11$எனக் கொடுக்கப்பட்ட நேர்க்கோட்டின் சமன்பாடானது
(1) X - அச்சுக்கு இணை (2) Y - அச்சுக்கு இணை(3) ஆதிப்புள்ளி வழிச் செல்லும்(4) $(0,11)$ என்ற புள்ளி வழிச் செல்லும்

4) $(5,7),(3,p)$மற்றும் $(6,6)$ என்பன ஒரு கோட்டமைந்தவை எனில், $p$-யின் மதிப்பு
(1) 3 (2) 6 (3) 9 (4) 12

5) $3x - y = 4$ மற்றும் $x + y = 8$ ஆகிய நேர்கோடுகள் சந்திக்கும் புள்ளி
(1) $(5,3)$ (2) $(2,4)$ (3) $(3,5)$ (4) $(4,4)$

6) $(12,3),(4,a)$என்ற புள்ளிகளை இணைக்கும் கோட்டின் சாய்வு $\frac{1}{8}$ எனில், $'a'$ -யின் மதிப்பு
(1) 1 (2) 4 (3) – 5 (4) 2

7) $(0,\ 0)$ மற்றும் $(-8,8)$என்ற புள்ளிகளை இணைக்கும் கோட்டிற்குச் செங்குத்தான கோட்டின் சாய்வு
(1) $-1$ (2) 1 (3) $\frac{1}{3}$ (4) $-8$

8) கோட்டுத்துண்டு PQ – யின் சாய்வு $\frac{1}{\sqrt{3}}$ எனில், PQ – க்கு செங்குத்தான இரு சம வெட்டியின் சாய்வு
(1) $\sqrt{3}$ (2) $-\sqrt{3}$ (3) $\frac{1}{\sqrt{3}}$ (4) 0

9) Y அச்சில் அமையும் புள்ளி A– யின் செங்குத்துத் தொலைவு 8 மற்றும் X அச்சில் அமையும் புள்ளி B– யின் கிடைமட்டத்தொலைவு 5 எனில், AB என்ற நேர்கோட்டின் சமன்பாடு
(1) $8x + 5y = 40$ (2) $8x - 5y = 40$
(3) $x = 8$ (4) $y = 5$

10) $7x - 3y + 4 = 0$ என்ற நேர்கோட்டிற்குச் செங்குத்தாகவும், ஆதிப்புள்ளி வழிச் செல்லும் நேர்க்கோட்டின் சமன்பாடு
(1) $7x - 3y + 4 = 0$ (2) $3x - 7y + 4 = 0$(3) $3x + 7y = 0$ (4) $7x - 3y = 0$

11) (i) $l_1 : 3y = 4x + 5$ (ii) $l_2 : 4y = 3x - 1$(iii) $l_3 : 4y + 3x = 7$ (iv) $l_4 : 4x + 3y = 2$ எனக் கொடுக்கப்பட்ட நான்கு நேர்கோடுகளுக்கு கீழ்க்கண்ட கூற்றுகளில் எது உண்மை?
(1) $l_1$ மற்றும் $l_2$ செங்குத்தானவை
(2) $l_1$ மற்றும் $l_4$ இணையானவை
(3) $l_2$ மற்றும் $l_4$ செங்குத்தானவை
(4) $l_2$ மற்றும் $l_3$ இணையானவை

12) $8y = 4x + 21$ என்ற நேர்க்கோட்டின் சமன்பாட்டிற்குக் கீழ்க்கண்டவற்றில் எது உண்மை?
(1) சாய்வு **0.5** மற்றும் y–வெட்டுத்துண்டு **2.6**
(2) சாய்வு **5** மற்றும் y–வெட்டுத்துண்டு **1.6**
(3) சாய்வு **0.5** மற்றும் y–வெட்டுத்துண்டு **1.6** (4) சாய்வு **5** மற்றும் y–வெட்டுத்துண்டு **2.6**

13) ஒரு நாற்கரமானது ஒரு சரிவகமாக அமையத் தேவையான நிபந்தனை
(1) இரு பக்கங்கள் இணை (2) இரு பக்கங்கள் இணை மற்றும் இரு பக்கங்கள் இணையற்றவை

அ.சுப்பாராஜ்.,ப.ஆ.,(கணக்கு), அரசுஉயர்நிலைப்பள்ளி, இருஞ்சிறை-626612, விருதுநகர்மாவட்டம்.
ப செந்தில்குமார்.,ப.ஆ(கணக்கு) அரசு மேல்நிலைப்பள்ளி, பனையூர்-626129, விருதுநகர் மாவட்டம்.

(3) எதிரெதிர் பக்கங்கள் இணை
(4) அனைத்துப் பக்கங்களும் சமம்.

14) சாய்வைப் பயன்படுத்தி நாற்கரமானது ஓர் இணைகரமாக உள்ளது எனக் கூற நாம் காண வேண்டியவை
(1) இரு பக்கங்களின் சாய்வுகள் (2) இரு சோடி எதிர் பக்கங்களின் சாய்வுகள் (3) அனைத்துப் பக்கங்களின் நீளங்கள் (4) இரு பக்கங்களின் சாய்வுகள் மற்றும் நீளங்கள்

15) (2, 1) ஐ வெட்டுப் புள்ளியாகக் கொண்ட இரு நேர்கோடுகள்
(1) $x-y-3=0\,;3x-y-7=0$ (2) $x+y=3\,;3x+y=7$ (3) $3x+y=3\,;x+y=7$
(4) $x+3y-3=0\,;x-y-7=0$

## முக்கோணவியல்

1) $sin^2\theta+\frac{1}{1+tan^2\theta}$–ன் மதிப்பு
(1) $tan^2\theta$ (2) 1 (3) $cot^2\theta$ (4) 0

2) $tan\theta\, cosec^2\theta-tan\theta$–ன் மதிப்பு
(1) $sec\theta$ (2) $cot^2\theta$ (3) $sin\theta$ (4) $cot\theta$

3) $(sin\alpha+cosec\alpha)^2+(cos\alpha+sec\alpha)^2=k+tan^2\alpha+cot^2\alpha$ எனில் $k$ –ன் மதிப்பு
(1) 9 (2) 7 (3) 5 (4) 3

4) $sin\theta+cos\theta=a$ மற்றும் $sec\theta+cosec\theta=b$ எனில் $b\,(a^2-1)$ –ன் மதிப்பு (1) $2a$ (2) $3a$ (3) 0 (4) $2ab$

5) $5x=sec\theta$ மற்றும் $\frac{5}{x}=tan\theta$ எனில் $x^2-\frac{1}{x^2}$ –ன் மதிப்பு
(1) 25 (2) $\frac{1}{25}$ (3) 5 (4) 1

6) $sin\theta=cos\theta$ எனில் $2tan^2\theta+sin^2\theta-1$–ன் மதிப்பு
(1) $\frac{-3}{2}$ (2) $\frac{3}{2}$ (3) $\frac{2}{3}$ (4) $\frac{-2}{3}$

7) $x=atan\theta$ மற்றும் $y=bsec\theta$ எனில்
(1) $\frac{y^2}{b^2}-\frac{x^2}{a^2}=1$ (2) $\frac{x^2}{a^2}-\frac{y^2}{b^2}=1$ (3) $\frac{x^2}{a^2}+\frac{y^2}{b^2}=1$ (4) $\frac{x^2}{a^2}-\frac{y^2}{b^2}=1$

8) $(1+tan\theta+sec\theta)(1+cot\theta-cosec\theta)$ –ன் மதிப்பு (1) 0
(2) 1 (3) 2 (4) $-1$

9) $acot\theta+bcosec\theta=p$ மற்றும் $bcot\theta+acosec\theta=q$ எனில் $p^2-q^2$ –ன் மதிப்பு
(1) $a^2-b^2$ (2) $b^2-a^2$ (3) $a^2+b^2$ (4) $b-a$

10) ஒரு கோபுரத்தின் உயரத்திற்கும் அதன் நிழலின் நீளத்திற்கும் உள்ள விகிதம் $\sqrt{3}:1$ எனில், சூரியனைக் காணும் ஏற்றக்கோண அளவானது (1) $45^o$ (2) $30^o$
(3) $90^o$ (4) $60^o$

11) ஒரு மின்கம்பமானது அதன் அடியில் சமதளப் பரப்பில் உள்ள ஒரு புள்ளியில் $30^o$ கோணத்தை ஏற்படுத்துகிறது. முதல் புள்ளிக்கு $'b'$ மீ உயரத்தில் உள்ள இரண்டாவது புள்ளியிலிருந்து மின்கம்பத்தின் அடிக்கு இறக்கக்கோணம் $60^o$ எனில் மின்கம்பத்தின் உயரமானது (மீட்டரில்)
(1) $\sqrt{3}b$ (2) $\frac{b}{3}$ (3) $\frac{b}{2}$ (4) $\frac{b}{\sqrt{3}}$

12) ஒரு கோபுரத்தின் உயரம் 60 மீ அகும். சூரியனை காணும் ஏற்றக்கோணம் $30^o$– லிருந்து $45^o$ ஆக உயரும் போது கோபுரத்தின் நிழலானது $x$ மீ குறைகிறது எனில், $x$ -ன் மதிப்பு
(1) 41.92 மீ (2) 43.92 மீ (3) 43 மீ (4) 45.6 மீ

13) பல அடுக்குக் கட்டடத்தின் உச்சியிலிருந்து 20 மீ

www.nammakalvi.com



உயரமுள்ள கட்டடத்தின் உச்சி, அடி ஆகியவற்றின் இறக்கக்கோணங்கள் முறையே $30^o$ மற்றும் $60^o$ எனில் பல அடுக்குக் கட்டடத்தின் உயரம் மற்றும் இரு கட்டடங்களுக்கு இடையேயுள்ள தொலைவானது (மீட்டரில்)

(1) $20, 10\sqrt{3}$ (2) $30, 5\sqrt{3}$ (3) $20, 10$ (4) $30, 10\sqrt{3}$

14) இரண்டு நபர்களுக்கு இடைப்பட்ட தொலைவு $x$ மீ அகும். முதல் நபரின் உயரமானது இரண்டாவது நபரின் உயரத்தைப் போல இரு மடங்காக உள்ளது. அவர்களுக்கு இடைப்பட்ட தொலைவு நேர்கோட்டின் மையப்புள்ளியிலிருந்து இரு நபர்களின் உச்சியின் ஏற்றக் கோணங்கள் நிரப்புக்கோணங்கள் எனில், குட்டையாக உள்ள நபரின் உயரம் (மீட்டரில்)

(1) $\sqrt{2}x$ (2) $\frac{x}{2\sqrt{2}}$ (3) $\frac{x}{\sqrt{2}}$ (4) $2x$

15) ஓர் ஏரியின் மேலே h மீ உயரத்தில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து மேகத்திற்கு உள்ள ஏற்றக்கோணம் $\beta$. மேக பிம்பத்தின் இறக்கக்கோணம் $45^o$ எனில், ஏரியில் இருந்து மேகத்திற்கு உள்ள உயரமானது (மீட்டரில்)

(1) $\frac{h(1+tan\beta)}{1-tan\beta}$ (2) $\frac{h(1-tan\beta)}{1+tan\beta}$ (3) $h\tan(45^o-\beta)$ (4) இவை ஒன்றுமில்லை

## அளவியல்

1) 15 செ.மீ உயரமும் 16 செ.மீ விட்டமும் கொண்ட ஒரு நேர்வட்டக் கூம்பின் வளைபரப்பு

(1) $60\pi$ ச.செ.மீ (2) $68\pi$ ச.செ.மீ (3) $120\pi$ ச.செ.மீ (4) $136\pi$ ச.செ.மீ

2) $r$ அலகுகள் ஆரம் உடைய இரு சம அரைக்கோளங்களின் அடிப்பகுதிகள் இணைக்கப்படும் போது உருவாகும் திண்மத்தின் புறப்பரப்பு

(1) $4\pi r^2$ ச.அ (2) $6\pi r^2$ ச.அ (3) $3\pi r^2$ ச.அ (4) $8\pi r^2$ ச.அ

3) ஆரம் 5 செ.மீ மற்றும் சாயுயரம் 13 செ.மீ உடைய நேர்வட்டக் கூம்பின் உயரம்

(1) 12 செ.மீ (2) 10 செ.மீ (3) 13 செ.மீ (4) 5 செ.மீ

4) ஓர் உருளையின் உயரத்தை மாற்றாமல் அதன் ஆரத்தைப் பாதியாகக் கொண்டு புதிய உருளை உருவாக்கப்படுகிறது. புதிய மற்றும் முந்தைய உருளைகளின் கன அளவுகளின் விகிதம்

**(1) 1 : 2 (2) 1 : 4 (3) 1 : 6 (4) 1 : 8**

5) ஓர் உருளையின் ஆரம் அதன் உயரத்தில் மூன்றில் ஒரு பங்கு எனில், அதன் மொத்தப் புறப்பரப்பு

(1) $\frac{9\pi h^2}{8}$ ச.அ (2) $24\pi h^2$ ச.அ (3) $\frac{8\pi h^2}{9}$ ச.அ (4) $\frac{56\pi h^2}{9}$ ச.அ

6) ஓர் உள்ளீடற்ற உருளையின் வெளிப்புற மற்றும் உட்புற ஆரங்களின் கூடுதல் 14 செ.மீ மற்றும் அதன் தடிமன் 4செ.மீ ஆகும். உருளையின் உயரம் 20 செ.மீ எனில், அதனை உருவாக்கப் பயன்பட்ட பொருளின் கன அளவு

(1) $5600\pi$ க.செ.மீ (2) $1120\pi$ க.செ.மீ (3) $56\pi$ க.செ.மீ (4) $3600\pi$ க.செ.மீ

7) ஒரு கூம்பின் அடிப்புற ஆரம் மும்மடங்காகவும் உயரம் இரு மடங்காகவும் மாறினால் கன அளவு எத்தனை மடங்காக மாறும்?

(1) 6 மடங்கு (2) 18 மடங்கு (3) 12 மடங்கு (4) மாற்றமில்லை

8) ஓர் அரைக்கோளத்தின் மொத்தப்பரப்பு அதன் ஆரத்தினுடைய வர்க்கத்தின் _____ மடங்காகும்?

(1) $\pi$ (2) $4\pi$ (3) $3\pi$ (4) $2\pi$

9) $x$ செ.மீ ஆரமுள்ள ஒரு திண்மக்கோளம் அதே ஆரமுள்ள ஒரு கூம்பாக மாற்றப்படுகிறது எனில், கூம்பின் உயரம் (1) $3x$ செ.மீ (2) $x$ செ.மீ

(3) $4x$ செ.மீ (4) $2x$ செ.மீ

10) 16 செ.மீ உயரமுள்ள ஒரு நேர்வட்டக் கூம்பின் இடைக்கண்ட ஆரங்கள் 8 செ.மீ மற்றும் 20 செ.மீ எனில், அதன் கன அளவு

(1) $3328\pi$ க.செ.மீ (2) $3228\pi$ க.செ.மீ (3) $3240\pi$ க.செ.மீ (4) $3340\pi$ க.செ.மீ

11) கீழ்க்காணும் எந்த இரு உருவங்களை இணைத்தால் ஓர் இறகுபந்தின் வடிவம் கிடைக்கும்?

(1) உருளை மற்றும் கோளம்
(2) அரைக்கோளம் மற்றும் கூம்பு (3) கோளம் மற்றும் கூம்பு (4) கூம்பின் இடைக்கண்டம் மற்றும் அரைக்கோளம்

12) $r_1$ அலகுகள் ஆரமுள்ள ஒரு கோளப்பந்து உருக்கப்பட்டு $r_2$ அலகுகள் ஆரமுடைய 8 சம கோள பந்துகளாக ஆக்கப்படுகிறது எனில், $r_1 : r_2$

(1) 2 : 1 (2) 1 : 2 (3) 4 : 1 (4) 1 : 4

13) 1 செ.மீ ஆரமும் 5 செ.மீ உயரமும் கொண்ட ஒரு மர உருளையிலிருந்து அதிகபட்சக் கன அளவு கொண்ட கோளம் வெட்டி எடுக்கப்படுகிறது எனில், அதன் கன அளவு (க.செ.மீ-ல்)

(1) $\frac{4}{3}\pi$ (2) $\frac{10}{3}\pi$ (3) $5\pi$ (4) $\frac{20}{3}\pi$

14) இடைக்கண்டத்தை ஒரு பகுதியாகக் கொண்ட ஒரு கூம்பின் உயரம் மற்றும் ஆரம் முறையே $h_1$ அலகுகள் மற்றும் $r_1$ அலகுகள் ஆகும். இடைக்கண்டத்தின் உயரம் மற்றும் சிறிய பக்க ஆரம் முறையே $h_2$ அலகுகள் மற்றும் $r_2$ அலகுகள் மற்றும் $h_2 : h_1 = 1 : 2$ எனில், $r_1 : r_2$-ன் மதிப்பு

(1) 1 : 3 (2) 1 : 2 (3) 2 : 1 (4) 3 : 1

15) சமமான விட்டம் மற்றும் உயரம் உடைய ஓர் உருளை, ஒரு கூம்பு மற்றும் ஒரு கோளத்தின் கன அளவுகளின் விகிதம்

(1) 1 : 2 : 3 (2) 2 : 1 : 3 (3) 1 : 3 : 2 (4) 3 : 1 : 2

## புள்ளியியல் மற்றும் நிகழ்தகவு

1) கீழே கொடுக்கப்பட்டவைகளில் எது பரவல் அளவை இல்லை?

(1) வீச்சு (2) திட்டவிலக்கம் (3) கூட்டுச்சராசரி (4) விலக்க வர்க்கச் சராசரி

2) 8, 8, 8, 8, 8, . . . , 8 ஆகிய தரவின் வீச்சு (1) 0 (2) 1 (3) 8 (4) 3

3) சராசரியிலிருந்து கிடைக்கப் பெற்ற தரவுப் புள்ளிகளுடைய விலக்கங்களின் கூடுதலானது ________.

(1) எப்பொழுதும் மிகை எண் (2) எப்பொழுதும் குறை எண் (3) பூச்சியம் (4) பூச்சியமற்ற முழுக்கள்

4) 100 தரவுப் புள்ளிகளின் சராசரி 40 மற்றும் திட்டவிலக்கம் 3 எனில், விலக்கங்களின் வர்க்கக் கூடுதலானது

(1) 40000 (2) 160900 (3) 160000 (4) 30000

5) முதல் 20 இயல் எண்களின் விலக்க வர்க்கச் சராசரியானது

(1) 32.25 (2) 44.25 (3) 33.25 (4) 30

6) ஒரு தரவின் திட்டவிலக்கமானது 3. ஒவ்வொரு மதிப்பையும் 5 - ஆல் பெருக்கினால் கிடைக்கும் புதிய தரவின் விலக்க வர்க்கச் சராசரியானது

(1) 3 (2) 15 (3) 5 (4) 225

7) $x, y, z$ ஆகியவற்றின் திட்டவிலக்கம் $p$ - எனில், $3x + 5, 3y + 5, 3z + 5$ ஆகியவற்றின் திட்டவிலக்கமானது

(1) $3p + 5$ (2) $3p$ (3) $p + 5$ (4) $9p + 15$

8) ஒரு தரவின் சராசரி மற்றும் மாறுபாட்டுக்கெழு முறையே 4

MATHS MASTERS

அ.சுப்பாராஜ்.,ப.ஆ.,(கணக்கு), அரசுஉயர்நிலைப்பள்ளி, இருஞ்சிறை-626612, விருதுநகர்மாவட்டம்.
ப செந்தில்குமார்.,ப.ஆ(கணக்கு) அரசு மேல்நிலைப்பள்ளி, பனையூர்-626129, விருதுநகர் மாவட்டம்.

மற்றும் 87.5% எனில், திட்டவிலக்கமானது

(1) 3.5 (2) 3 (3) 4.5 (4) 2.5

9) கொடுக்கப்பட்டவைகளில் எது தவறானது?

(1) $P(A) > 1$ (2) $0 \leq P(A) \leq 1$ (3) $P(\varphi) = 0$ (4) $P(A) + P(\bar{A}) = 1$

10) $p$ சிவப்பு, $q$ நீல, $r$ பச்சை நிறக் கூழாங்கற்கள் உள்ள ஒரு குடுவையில் இருந்து ஒரு சிவப்பு கூழாங்கல் எடுப்பதற்கான நிகழ்தகவானது

(1) $\frac{q}{p+q+r}$ (2) $\frac{p}{p+q+r}$ (3) $\frac{p+q}{p+q+r}$ (4) $\frac{p+r}{p+q+r}$

11) ஒரு புத்தகத்திலிருந்து சமவாய்ப்பு முறையில் ஒரு பக்கம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அந்தப் பக்க எண்ணின் ஒன்றாம் இட மதிப்பானது 7 - ஐ விடக் குறைவாக இருப்பதற்கான நிகழ்தகவானது

(1) $\frac{3}{10}$ (2) $\frac{7}{10}$ (3) $\frac{3}{9}$ (4) $\frac{7}{9}$

12) ஒரு நபருக்கு வேலை கிடைப்பதற்கான நிகழ்தகவானது $\frac{x}{3}$. வேலை கிடைக்காமல் இருப்பதற்கான நிகழ்தகவு $\frac{2}{3}$ எனில், $x$ -யின் மதிப்பானது

(1) 2 (2) 1 (3) 3 (4) 1.5

13) கமலம், குலுக்கல் போட்டியில் கலந்து கொண்டாள். அங்கு மொத்தம் 135 சீட்டுகள் விற்கப்பட்டன. கமலம் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு $\frac{1}{9}$ எனில், கமலம் வாங்கிய சீட்டுகளின் எண்ணிக்கை.

(1) 5 (2) 10 (3) 15 (4) 20

14) ஆங்கில எழுத்துக்கள் $\{a, b, c, \ldots, z\}$–யிலிருந்து ஓர் எழுத்து சமவாய்ப்பு முறையில் தேர்வு செய்யப்படுகிறது. அந்த எழுத்து $x$ –க்கு முந்தைய எழுத்துக்களில் ஒன்றாக இருப்பதற்கான நிகழ்தகவு

(1) $\frac{12}{13}$ (2) $\frac{1}{13}$ (3) $\frac{23}{26}$ (4) $\frac{3}{26}$

15) ஒரு பணப்பையில் ரூ.2000 நோட்டுகள் 10-ம், ரூ.500 நோட்டுகள் 15-ம், ரூ.200 நோட்டுகள் 25-ம் உள்ளன. ஒரு நோட்டு சமவாய்ப்பு முறையில் எடுக்கப்படுகின்றது எனில், அந்த நோட்டு ரூ.500 நோட்டாகவோ அல்லது ரூ.200 நோட்டாகவோ இருப்பதற்கான நிகழ்தகவு என்ன?

(1) $\frac{1}{5}$ (2) $\frac{3}{10}$ (3) $\frac{2}{3}$ (4) $\frac{4}{5}$

Virudhunagar District

MATHS MASTERS

Bloggers not allowed to share this material

Mail id:
mathsmasters.vnr@gmail.com
Website: mathsmasters-vnr.blogspot.com

அ.சுப்பாராஜ்.,ப.ஆ.,(கணக்கு), அரசுஉயர்நிலைப்பள்ளி, இருஞ்சிறை-626612, விருதுநகர்மாவட்டம்.
ப செந்தில்குமார்.,ப.ஆ(கணக்கு) அரசு மேல்நிலைப்பள்ளி, பனையூர்-626129, விருதுநகர் மாவட்டம்.